وقفات مع خطبة الوداع

# இறுதி நபியின் இறுதி உரை
# ஒரு பார்வை

தொகுப்பு : முஹம்மத் மன்சூர் முஸ்தபா B.A(Hons)

بسم الله الرحمن الرحيم

புகழனைத்தும் வல்லல நாயனுக்கே உரிய தாகும். ஸலவாத்தும், ஸலாமும் நபிமார்களில் சிறந்தவர்களான முஹம்மத் (ஸல்) அவர்கள் மீதும்,அவர்கள் குடும்பத்தினர் அனைவர் மீதும் உண்டாவதாக.

இறுதி நபியின் இறுதி உரை எனும் தலைப்பிடப்பட்ட இத்தொகுப்பில் றஸூல் (ஸல்) அவர்கள் தன் இறுதி ஹஜ்ஜின் போது அறபா தினத்தில் ஆற்றிய உரையை அதன் முக்கியத்துவம் கருதியும் அதன் பக்கம் இன்றைய மனித சமூகத்தின் தேவை கருதியும் கட்டம் கட்டமாக இங்கு தெளிவு படுத்தப்படுகின்றது.

அருமை நபி (ஸல்) அவர்கள் இவ்வுரையில் இஸ்லாத்தின் அடிப்படை விழுமியங்கள் கோட்பாடுகள், அரிய போதனைகளை உருக்கமாகக் கூறியிருப்பதைப் பார்க்கிறோம். அவற்றைப் பின் வரும் பிரிவுகளாக நோக்க முடியும்.

- திருமறை அல்குர்ஆன் நபி வழி அஸ்ஸூன்னாவைக் கடைப்பிடிக்குமாறு வலியுறுத்தல்.

وَقَدْ تَرَكْتُ فِيكُمْ مَا لَنْ تَضِلُّوا بَعْدَهُ إِنْ اعْتَصَمْتُمْ بِهِ كِتَابُ اللَّهِ
( رواه مسلم)

உங்களுக்கு மத்தியில் நான் ஒன்றை விட்டுச் செல்கின்றேன். அதைப் பற்றிப் பிடிக்கும் போதெல்லாம் நீங்கள் வழிதவற மாட்டீர்கள் .அதுதான் இறை வேதம் அல் குர்ஆன்".

தன் இறுதி உரையில் அப்பெரும் மக்கள் திரளில் அல் குர்ஆன் மகத்துவம் பற்றியும் அதுவே மனித சமூகத்தை வழிகேட்டில் இருந்தும்,நாசத்திலிருந்தும் பாது காக்கின்ற வல்ல ஆயுதமும், கேடயமும் என்ற உண்மையை ஞாபகமூட்டியிருப்பது இங்கு புலனாகிறது. தன் யுக முடிவு நெருங்கி விட்டதைப் புரிந்து கொண்ட நபி(ஸல்) அவர்கள் தன் மரணத்தின் பின் உம்மத்தினர் வழிதவறி விடாமல் பாதுகாக்கப்பட வேண்டுமென்ற பேரவாவினால் தன் இறுதி யுரையில் அதை ஞாபகமூட்ட மறக்கவில்லை. ஏன்! அரேபிய தீபகற்பத்தில் இந்த வேத வசனங்கள் முழங்குவதற்கு முன்னால் மக்கள் நிலை சீர் கேட்டின் சிகரத்தை எட்டி இருந்தது. மனிதர்களையும், வானவர்களையும், ஜின்களையும், கற்களையும், வணங்கிக் கொண்டு கொள்கையில் கோட்டை விட்ட மக்களை உலகம் போற்றும் உத்தமர்களாகவும், நடமாடும் சுவனபதிகளாகவும் மாற்றியது அந்த இறைவேதம் அல்குர்ஆன்.

எவ்வாறு மனித உடலுக்கு உயிர் அவசியமோ அதே போன்று மனித வாழ்க்கைக்கு அல்குர்ஆன் என்ற உயிர் அவசியமாகும். இல்லையென்றால் உயிர்அற்ற உடல் துர்வாடை வீசுவது போல அல்குர்ஆன் எனும் உயிர் அற்ற வாழ்வு சீர் கெட்டதாகவும்,அசிங்கமானதாகவும் மாறிவிடும்.

எனவேதான் வல்ல நாயன் திருமறையில் வஹியை உயிரென பெயர் சூட்டியுள்ளான்.

وَأَوْحَيْنَا إِلَىٰ مُوسَىٰ أَنْ أَسْرِ بِعِبَادِي إِنَّكُم مُّتَّبَعُونَ

அவ்வாறே எம் கட்டளையில் உயிரோட்டமானதை உமக்கு வஹியாக அறிவித்தோம். எனக்குறிப்பிட்டுள்ளான்". (அஸ்ஸுறா :52)

இவ்விறை வசனங்களை விளங்கவும், செயல் வடிவில் உணர்த்தவும், இறை நோக்கத்தை தெளிவு படுத்தவும் அஸ்ஸுன்னா எனும் நபி வழி அவசியம் என்பதை அல்குர்ஆன் தெளிவு படுத்துவது திரு மறையும், ஸுன்னாவும் பிண்ணிப் பினைந்த ஒன்று என்பதைக் காட்டுகின்றது.
பின்வரும் வசனம் இதை இவ்வாறு உணர்துகின்றது.

بِالْبَيِّنَاتِ وَالزُّبُرِ ۗ وَأَنزَلْنَا إِلَيْكَ الذِّكْرَ لِتُبَيِّنَ لِلنَّاسِ مَا نُزِّلَ إِلَيْهِمْ وَلَعَلَّهُمْ يَتَفَكَّرُونَ

மக்களுக்கு அருளப்பட்டதை நீர் அவர்களுக்கு விளக்க வேண்டும் என்பதற்காகவும், அவர்கள் சிந்திக்க வேண்டும் என்பதற்காகவும் இப்போதனையை நாம் அருளினோம்". (அந்நஹ்ல்:44)

எனவே சுன்னாவின் மூலமே குர்அனை முழுமையாக விளங்க முடியும் என்ற உண்மையை இவ்வசனம் தெளிவு படுத்துவதோடு அல்குர்ஆனைப் பின்பற்றுகின்ற ஒருவர் நபி வழியை மறுத்தால் அல் குர்ஆனை மறுத்தவராக கருதப்படுவார் என்பதைக் காட்டுகிறது. ஏனெனில் திரு மறை வசனங்கள் ஏராளமானவை சுன்னாவைப் பின்பற்றுமாறு வலியுறுத்தி நிற்பது தெளிவான உண்மையாகும்.
அருமை நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்:

عَنْ الْمِقْدَامِ بْنِ مَعْدِي كَرِبَ عَنْ رَسُولِ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ أَنَّهُ قَالَ أَلَا إِنِّي أُوتِيتُ الْكِتَابَ وَمِثْلَهُ مَعَهُ. (رواه أبو داود)

நான் இறை வேதம் (அல்குர்ஆனை)யும் அதனுடன் அது போன்ற ஒன்றையும் கொடுக்கப்பட்டுள்ளேன். (அபுதாஊத்)

அது போன்ற ஒன்று என்பது அதைத் தெளிவு படுத்தும் வஹியான நபி வழி என இங்கு தெளிவுபடுத்தப்படுவதைக் கான்கிறோம்.

- ஜாஹிலிய்ய நடைமுறைகள், வியாபார முறைகளை முடிவுக்குக் கொண்டுவரல்

أَلَا كُلُّ شَيْءٍ مِنْ أَمْرِ الْجَاهِلِيَّةِ تَحْتَ قَدَمَيَّ مَوْضُوعٌ وَدِمَاءُ الْجَاهِلِيَّةِ مَوْضُوعَةٌ وَإِنَّ أَوَّلَ دَمٍ أَضَعُ مِنْ دِمَائِنَا دَمُ ابْنِ رَبِيعَةَ بْنِ الْحَارِثِ كَانَ مُسْتَرْضِعًا فِي بَنِي سَعْدٍ فَقَتَلَتْهُ هُذَيْلٌ وَرِبَا الْجَاهِلِيَّةِ مَوْضُوعٌ وَأَوَّلُ رِبًا أَضَعُ رِبَانَا رِبَا عَبَّاسِ بْنِ عَبْدِ الْمُطَّلِبِ فَإِنَّهُ مَوْضُوعٌ كُلُّهُ.( رواه مسلم)

நிச்சயமாக ஜாஹிலிய்ய விவகாரம் அனைத்தும் என் பாதத்தின் கீழ் வைக்கப்பட்டுள்ளது. ஜாஹிலிய்ய கொலைகள் அனைத்தும் நிராகரிக்கப்பட்டதாகும். முதன் முதலாக நான் றத்துச் செய்கின்ற கொலைக்குற்றம் றபீஆவின் மகனான இயாஸின் கொலையாகும். அவர் ஸாத் கிளையாரிடத்தில் பாலூட்டப்பட்ட பாலகனாக இருந்தார். அவரை ஹுதைல் கோத்திரத்தினர் கொன்றனர். ஜாஹிலிய்ய வட்டிகள் யாவும் கைவிடப்பட்டதாகும். முதன் முதலாக நான்விடுகின்ற வட்டி எங்கள் வட்டியான அப்பாஸ் அவர்களின் வட்டியாகும் .அது அனைத்துமே றத்துத் செய்யப்பட்டது. (முஸ்லிம்)

இப்பகுதியில் ரஸூல் (ஸல்) அவர்கள் இருவிடயங்களை தன் தோழர்களுக்கு தெளிவுபடுத்துகின்றார்கள் .ஒன்று இஸ்லாத்திற்கு முன் இடம்பெற்ற தகறாறுகளினால் உண்டான கொலைள் யாவும் இஸ்லாத்தின் பின் மறக்கப்படவும், மறைக்கப்படவும் வேண்டியதாகும். ஈமானிய உணர்வின்றி, இறை வழிகாட்டலின்றி நடை பெற்ற அந்த ஜாஹிலிய்யப் பண்புகளுக்கு எவ்வித பெறுமதியும் கிடையாது. இஸ்லாத்திற்குப் பின் அவை ஞாபகப் படுத்தப்படக் கூடாது. அது காலின் கீழ் போட்டு மிதிக்கடப்படவேண்டியதே. இரண்டாவது ஜாஹிலிய்ய நடை முறைகளில் ஒன்றான வட்டி முறையை ரஸூல் (ஸல்) அவர்கள் அதன் விபரீதம்கருதி தன் இறுதியுரையில் பல்லாயிரக்கணக்கானவர்களுக்கு முன்னிலையில் எச்சரிக்கின்றார்கள். திருமறையிலும் சுன்னாவிலும் மிகக் கடுமையாக எச்சரிக்கப்பட்டிருந்தும் இங்கு மீண்டும் எச்சரிப்பது இதன் அபாயத் தன்மையை உணர்த்துகின்றது.

ஆகவேதான் அதை முதல் அமுல்படுத்துமுகமாக தன் அன்புச் சாச்சாவான அப்பாஸ் (ரழி) அவர்கள் ஜாஹிலிய்யாவில் செய்த வட்டியை விட்டு விடுவதாக இங்கு சூழுரைக்கின்றார்கள்.

இன்று அன்னிய சமூகத்தை விட்டுவிடுவோம் அவர்களை இவ்விடயத்தில் நெறிப்படுத்த சத்திய மார்கம் கிடையாது, மனோஇச்சையின் அடிப்பயையில் வாழ்க்கையை கடத்துபவர்கள். ஆனால் இஸ்லாமிய உம்மத் அவர்களின் வலையில் சிக்குண்டு இக்கொடிய பாவத்தில் சாதாரணமாக ஈடுபட்டு வருகின்றனர் வட்டி என்ற பெயரை மாத்திரம் மாற்றி வேறு பெயர்களிலும் , வடிவங்களிலும் பரவலாக அம்முறை கையாளப்பட்டு வருகிறது. முஸ்லீம்களில் சிலர் இவ்வட்டி முறையில் நேரடியாகத் தொடர்பில்லாமல் அதற்கு ஏதோ ஒரு முறையில் உதவியாக இருக்கின்றனர். தாம் அதை எடுப்பதோ, சாப்பிடுவதோ இல்லையே! வங்கியில்தொழில்தானே புரிகிறோம் என்றெல்லாம் நியாயம் கற்பிக்கின்றனர். இவ்வாறான சகோதரர்களுக்கு ஒரு நபி மொழியை ஞாபகமூட்டுவது பொருத்தமென நினைக்கிறேன்.

عَنْ جَابِرٍ قَالَ لَعَنَ رَسُولُ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ آكِلَ الرِّبَا وَمُؤْكِلَهُ وَكَاتِبَهُ وَشَاهِدَيْهِ وَقَالَ هُمْ سَوَاءٌ (رواه مسلم)

ஜாபிர் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள் ரஸூல் (ஸல்) அவர்கள் வட்டியைச் சாப்பிட்டவன், அதை உண்ணக் கொடுப்பவன், அதற்கு சாட்சியாக இருப்பவன், அதை எழுதுபவன் அனைவரையும் சபித்துள்ளார்கள். (முஸ்லிம்)

மனித உரிமை வலியுறுத்தல்.

قَالَ فَإِنَّ دِمَاءَكُمْ وَأَمْوَالَكُمْ وَأَعْرَاضَكُمْ عَلَيْكُمْ حَرَامٌ كَحُرْمَةِ يَوْمِكُمْ هَذَا فِي شَهْرِكُمْ هَذَا فِي بَلَدِكُمْ هَذَا (متفق عليه)

எவ்வாறு இந்த மண் (மக்கா) புனிதமானதோ, இம்மாதம் (துல் ஹஜ்) புனிதமானதோ, இத்தினம் (அரபா) புனிதமானதோ அவ்வாறே உங்களில் ஒருவரின் உயிர், செல்வம், மானம் புனிதமானதாகும். மற்றவர் அதை சாட முயல்வது ஹராமானதாகும்.

(புகாரி ,முஸ்லிம்)

இப்பகுதியானது மிக முக்கிய இடத்தை வகிக்கின்றது. இன்றுதான் மனிதன் மனிதனின் அடிப்படை உரிமை யாது என சிந்திக்க ஆரம்பித்துள்ளான். அனீதியும் அத்துமீறல்களும் தலை துக்கியதும், கொலைகளும், கொள்ளைகளும் தலை விரித்தாடத் தொடங்கியதும், கொல்லப்படுபவன் நான் ஏன் கொல்லப்படுகிறேன் எனத் தெரியாமலும் கொல்பவன் நான் ஏன் கொல்கிறேன் எனப் புரியாமலும் இன்று எல்லாமே கட்டிலடங்காது போனதும் மனிதன் மனித உரிமையைப் பேனவும், பாதுகாக்கவும் நிறுவனங்களையும், அமைப்புக்களையும் அமைத்துக் கொண்டு தடுமாறிக்கொண்டிருக்கின்றான். ஆனால் இற்றைக்கு பலநூற்றாண்டுகளுக்கு முன்னால் இவ்வுரிமைகளை மிகத்துல்லியமாகத் தன் இறுதியுரையில் சாந்தி, சமாதான, மனித நேயத்தின் தூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

இன்று தடுமாற்றத்தில் இருக்கின்ற இந்த உலகம் இப்போதனையை செயற்படுத்தியிருந்தால் இவ்வாறான மோசமான அநீதிகளை சந்தித்திருக்காது.

இப்பகுதியிலே மனித வாழ்வு தங்கியுள்ள மூன்று அம்சங்களை அருமை நபி (ஸல்) அவர்கள் சுட்டிக்காட்டியுள்ளார்கள். அவை உயிர், உடமை, மானம். இவை மூன்றுக்கும் உத்தரவாதம் அளிக்கப்பட்டால்தான் சாந்தி, சமாதானம், அமைதி நிலவும். ஆகவேதான் அதற்கு அவ்வளவு முக்கியம் அளித்துள்ளார்கள்.

இஸ்லாத்தைப் பொறுத்த வரையில் அன்னிய மதத்தைச் சேர்ந்த மனிதனாக இருந்தாலும் அவனுடனும் நீதி வழுவாநடத்தல் வேண்டுமென இஸ்லாம் வலியுத்துகின்றது.

வல்ல நாயன் திருமறையில்:

يَا أَيُّهَا الَّذِينَ آمَنُوا كُونُوا قَوَّامِينَ لِلَّهِ شُهَدَاءَ بِالْقِسْطِ ۖ وَلَا يَجْرِمَنَّكُمْ شَنَآنُ قَوْمٍ عَلَىٰ أَلَّا تَعْدِلُوا ۚ اعْدِلُوا هُوَ أَقْرَبُ لِلتَّقْوَىٰ ۖ وَاتَّقُوا اللَّهَ ۚ إِنَّ اللَّهَ خَبِيرٌ بِمَا تَعْمَلُونَ

உங்களுக்கு ஒரு சமூகத்தாரோடு இருக்கின்ற பகைமை நீது செலுத்துவதிலிருந்து தடுக்க வேண்டாம். நீதி செலுத்துங்கள் அதுவே இறையச்சத்திற்கு மிக சமீபமானதாகும். } (அல் மாயிதா :8)

அதே போன்று எம்மோடு பகைத்துக் கொண்ட அன்னிய ஒருவன் ஒப்பந்தத்தின் அடிப்படையில் இஸ்லாமிய நாட்டில் பிரவேசித்துவிட்டால் அவனை எவரும் நெருங்க முடியாது. அவனுடைய உயிருக்கும்,உடமைக்கும் இஸ்லாம் அபயம் அளிக்கிறது.

ரஸூ ல் (ஸல்) அவர்கள் கூறுகின்றார்கள்:

عَنْ عَبْدِ اللَّهِ بْنِ عَمْرٍو رَضِيَ اللَّهُ عَنْهُمَا عَنْ النَّبِيِّ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ مَنْ قَتَلَ مُعَاهَدًا لَمْ يَرِحْ رَائِحَةَ الْجَنَّةِ وَإِنَّ رِيحَهَا تُوجَدُ مِنْ مَسِيرَةِ أَرْبَعِينَ عَامًا (رواه البخاري)

எவர் ஒப்பந்தம் செய்யப்பட்ட காபிரை கொலை செய்கின்றாரோ அவர் சுவனத்தின் வாடையைக் கூட நுகரமாட்டார் நிச்சயமாக அதன் வாடையானது நாற்பது வருடங்கள் பிரயாணம் செய்கின்ற தொலைவிற்கு அப்பால் உணரப்படக்கூடியதாகும். (புகாரி)

எனவே சுவனத்தின் வாடையைக் கூட நுகர முடியாத அளவுக்கு ஒருவனுடைய உயிருக்கு சேதம் ஏற்படுத்துபவனுக்கு இஸ்லாம் தண்டனை வழங்குகின்றதென்றால் எந்த அளவு ஒரு மனிதன் இஸ்லாத்தின் நிழலில் அமைதியையும், பாதுகாப்பையும்,நீதியையும் பெறுகிறான் என்பது இங்கு தெள்ளத் தெளிவான உண்மையாகும்.

## பெண் உரிமை பேனல்

"أَلَا وَاسْتَوْصُوا بِالنِّسَاءِ خَيْرًا فَإِنَّمَا هُنَّ عَوَانٌ عِنْدَكُمْ لَيْسَ تَمْلِكُونَ مِنْهُنَّ شَيْئًا غَيْرَ ذَلِكَ إِلَّا أَنْ يَأْتِينَ بِفَاحِشَةٍ مُبَيِّنَةٍ فَإِنْ فَعَلْنَ فَاهْجُرُوهُنَّ فِي الْمَضَاجِعِ وَاضْرِبُوهُنَّ ضَرْبًا غَيْرَ مُبَرِّحٍ فَإِنْ أَطَعْنَكُمْ فَلَا تَبْغُوا عَلَيْهِنَّ سَبِيلًا أَلَا إِنَّ لَكُمْ عَلَى نِسَائِكُمْ حَقًّا وَلِنِسَائِكُمْ عَلَيْكُمْ حَقًّا فَأَمَّا حَقُّكُمْ عَلَى نِسَائِكُمْ فَلَا يُوطِئْنَ فُرُشَكُمْ مَنْ تَكْرَهُونَ وَلَا يَأْذَنَّ فِي بُيُوتِكُمْ لِمَنْ تَكْرَهُونَ أَلَا وَحَقُّهُنَّ عَلَيْكُمْ أَنْ تُحْسِنُوا إِلَيْهِنَّ فِي كِسْوَتِهِنَّ وَطَعَامِهِنَّ" (قَالَ أَبُو عِيسَى هَذَا حَدِيثٌ حَسَنٌ صَحِيحٌ)

தெரிந்து கொள்ளுங்கள்! பெண்கள் விடயத்தில் நான் உபதேசிக்கிறேன: ஏனெனில் அவர்கள் உங்கள் பொறுப்பில் உள்ள கைதிகளைப் போன்றவர்கள். அதைத் தவிர வேறு எந்த அதிகாரமும் அவர்கள் விடயத்தில் உங்களுக்குக் கிடையாது. மாறாக அவர்கள் நிருபனமான விபச்சாரத்தில் ஈடுபட்டாலே தவிர. அப்போது அவர்களை படுக்கைகளில் விலக்குங்கள். அவர்களை இலகுவாக அடியுங்கள். அவர்கள்உங்களுக்குக் கட்டுப்பட்டுவிட்டால் அவர்களுக்கு எதிராக வேறு வழியைத் தேடாதீர்கள். புரிந்து கொள்ளுங்கள்! நிச்சயமாக நீங்கள் உங்கள் பெண்களுக்கென செய்ய வேண்டிய கடமையுமுண்டு,அவர்கள் உங்களுக்குச் செய்யவேண்டியகடமைகளும்உண்டு. அவர்கள் உங்களுக்குச்

செய்யவேண்டியது உங்கள் படுக்கைகளில் நீங்கள் விரும்பாதோர்களுடன் சேராமலிருப்பதும், உங்கள் வீடுகளில் அவர்களை பிரவேசிக்க அனுமதிக்காமலிருப்துமாகும்.
இதோ!நீங்கள்அவர்களுக்குசெய்யவேண்டியதை நன்கு புரிந்து கொள்ளுங்கள். அப் பெண்களுக்கு உணவளிப்பதிலும், உடையளிப்பதிலும் நன்கு நடந்து கொள்வதாகும். (திர்மிதி)

மற்றுமோர் அறிவிப்பில்:

عَنْ حَكِيمِ بْنِ مُعَاوِيَةَ الْقُشَيْرِيِّ عَنْ أَبِيهِ قَالَ قُلْتُ يَا رَسُولَ اللَّهِ مَا حَقُّ زَوْجَةِ أَحَدِنَا عَلَيْهِ قَالَ أَنْ تُطْعِمَهَا إِذَا طَعِمْتَ وَتَكْسُوَهَا إِذَا اكْتَسَيْتَ أَوْ اكْتَسَبْتَ وَلَا تَضْرِبْ الْوَجْهَ وَلَا تُقَبِّحْ وَلَا تَهْجُرْ إِلَّا فِي الْبَيْتِ.
( رواه أبو داود)

முஆவியா பின் ஹியதா அல் குஸைரி (ரழி) அவர்கள் ரஸுல் (ஸல்) அவர்களிடம் நாங்கள் எங்கள் மனைவியருக்கு செய்ய வோண்டியகடமை யாது என வினவினார்கள். ஆதற்கு நபியவர்கள் நீ உண்டால் அவளுக்கும் உண்ணக் கொடு, உடுத்தால் அவளுக்கும் உடுக்கக்கொடு, முகத்தில் அடித்து விடாதே அவளை இம்சைப்படுத்தாதே, வீட்டிலே தவிர வேறு இடங்களில் அவளை வெறுத்தொதுக்காதே (அபுதாஊத்)

அழைப்புப்பணியின் அவசியம்

أَلَا لِيُبَلِّغْ الشَّاهِدُ الْغَائِبَ فَلَعَلَّ بَعْضَ مَنْ يُبَلَّغُهُ أَنْ يَكُونَ أَوْعَى لَهُ مِنْ بَعْضِ مَنْ سَمِعَه (رواه البخاري)

இதோ!இங்குசமூகமாயிருப்போர் தொலை விலிருப்போருக்கு எத்திவையுங்கள் ஏனெனில் எத்திவைக்கப்படுபவர் ஏத்திவைப்பவரை விட அதிகம் கிரகிப்பவராகவும், விளங்குபவராகவும் இருக்கலாம். (புகாரி)

இச்சொற்பொழிவானது தூரநோக்குடைய, ஆழமான கருத்துடையதாகக் காணப்படுகிறது. ரஸுல் (ஸல்) அவர்கள் தன் சமூகத்தினர் மீது கொண்ட மட்டிட முடியாத அக்கரையின் காரணமாக தான் ஆற்றிய இச் சொற்பொழிவானது ஒவ்வொருவருக்கும் அவசியமானது. ஆகவே சொல்லப்பட்டதை எத்திவைக்குமாறு கட்டளையிடுகின்றார்கள். இச்சொற்பொழிவிலிருந்து நாம் தெரிந்ததை புரியாவிட்டாலும் அதை சுமந்து சென்று தெரியாதவர்களுக்கு கற்றுக் கொடுப்பதின் அவசியத்தை புரிந்து கொள்கிறோம். மேலும் இந்த தீனானது ஒவ்வொருவருக்கும் அவசினமானது, உலகம் முழுவதும் இப் பிரகாசம் சென்றடைய வேண்டும். வராதவர்கள் வந்தவர்களைவிட சிலவேளை மிகவும் கிரகிப்பவர்களாகவும், பிரித்துவிளங்குபவர்களாகவும் இருக்கலாம் . அதனால் இந்த சமூகம் மிக்க பயன் அடையும் என்பதை வலியுறுத்துவதைப் பார்க்கிறோம்.

இந்த உண்மையை வரலாற்றைப் படிப்போர் தெளிவாகப் புரிந்துகொள்வர். மாத்திரமல்லாமல் ஒருவர் ஒரு விடயத்தை எத்தி வைத்து விட்டால் அவ்விடயத்தை அமுல்படுத்துவோருக்குக் கிடைக்கும் கூலியைப் போன்று இவருக்கும் வழங்கப்படுவதோடு அதை அமுல்ப்படுத்துபவரின் கூலியில் எவ்வித குறைவும் ஏற்படுத்தப்படுவதில்லை என்பதை நபி மொழிகளிலே பார்க்கிறோம். இதைத்தான் பின் வரும் செய்தி உணர்த்துகிறது.

عَنْ أَبِي هُرَيْرَةَ أَنَّ رَسُولَ اللَّهِ صَلَّى اللَّهُ عَلَيْهِ وَسَلَّمَ قَالَ مَنْ دَعَا إِلَى هُدًى كَانَ لَهُ مِنْ الْأَجْرِ مِثْلُ أُجُورِ مَنْ تَبِعَهُ لَا يَنْقُصُ ذَلِكَ مِنْ أُجُورِهِمْ شَيْئًا وَمَنْ دَعَا إِلَى ضَلَالَةٍ كَانَ عَلَيْهِ مِنْ الْإِثْمِ مِثْلُ آثَامِ مَنْ تَبِعَهُ لَا يَنْقُصُ ذَلِكَ مِنْ آثَامِهِمْ شَيْئًا. (رواه مسلم)

யார் ஓர் நேர்வழியின் பக்கம் அழைக்கின்றாரோஅதைப் பின்பற்றுவோரின் கூலியைப் போன்று அவருக்கும் உள்ளது. அவர்களின் கூலியில் எவ்வித குறைவும் ஏற்படுவதில்லை. யார் ஓர் வழிகேட்டின் பக்கம் அழைக்கின்றாரோ அதைப் பின்பற்றுவோரின் பாவங்களைப் போன்று அவருக்கும்உள்ளது. அவர்களின்பாவங்களில் எவ்வித குறையும் ஏற்படுவதில்லை. (புகாரி)

வல்ல நாயன் நம் அனைவரையும் சொல்லை செவிமடுத்து அதில் நல்லதை பின்பற்றும் விசுவாசிகளாக ஆக்குவானாக.

தொகுப்பு: மன்சூர் மதனி